**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**M.C.O.P.40 /2022**

**CNR.No.TNCB19000**

| **Deposition** | : | **RW.1** |
|---|---|---|
| Name | : | சீனிவாசன் |
| Father's / Husband Name | : | அருணாச்சலம் |
| Village / முகவரி | : | உதவியாளர் மோட்டார் போக்குவரத்து அலுவலகம் |
| Taluk / தாலுக்கா | : | மேட்டுப்பாளையம் |
| Age / வயது | : | 44 |

The witness sweared under Oaths Act 1969 on this the day of 13 th November 2025

**முதல் விசாரணை**

நான் தற்போது மேட்டுப்பாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிகிறேன். இவ்வழக்கு சம்பந்தமாக சாட்சி சொல்ல எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது அந்த அழைப்பாணையின் பேரில் வட்டார போக்குவரத்து அலுவலர் இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கு சம்பந்தமாக சாட்சி சொல்ல எனக்கு அதிகாரம் கொடுத்துள்ளார். அந்த கடிதம் எ.ம.சா.ஆ.1 ஆகும். மோட்டார் வாகன ஆய்வாளர் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டிய வாகனம் TN 43 D 2332 வாகனத்தை ஆய்வு செய்தார். அந்த ஆய்வறிக்கை எ***.ம.சா.ஆ.2 ஆகும். மனுதாரர் ஓட்டிய வாகனம் TN 40 Q 5612 என்ற வாகனத்தை*** மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்து ஆறிக்கை வழங்கி உள்ளார். ***அந்த ஆய்வறிக்கை எ.ம.சா. 3 ஆகும்.*** அந்த அறிக்கையில் மனுதாரர் ஓட்டுனர் உரிமம் இல்லாமல் ஓட்டியதாக அறிக்கை கொடுத்துள்ளார். அதற்காக சலான் கொடுத்துள்ளார்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

ம.சா.ஆ. 8 ல் 2ம் எதிர்மனுதாரரின் பெயரில் TN 43 D 2332 உள்ளது என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். TN 43 D 2332 என்ற வாகனத்தை ஓட்டிய ஓட்டுனரின் பெயர் 1ம் எதிர்மனுதாரரின் பெயர் உள்ளது என்றால் சரிதான். TN 43 D 2332 என்ற வாகனத்திற்கு 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ . 8 ஆவணத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டிய வாகனத்திற்கு தகுதி சான்று உள்ளது என்றால் சரிதான். அந்த தகுதி சான்று 09.07.2019 முதல் 08.07.2020 வரை நடப்பில் உள்ளது.

மோட்டார் வாகன ஆய்வாளர் இயந்திர கோளாறினால் விபத்து ஏற்படவில்லை என அறிக்கை வழங்கி உள்ளார் என்றால் சரிதான். எ.ம.சா. ஆ. 3 ஆவணத்தின்படி விபத்து நடந்த 3 மாதம் கழித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்துபோன வீரபத்திரனுக்கு சொந்தமான TN 40 Q 5612 வாகனத்திற்கு 20.02.2018 முதல் 19.02.2033 ம் தேதி வரை தகுதி சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். TN 40 Q 5612 வாகனத்தின் உரிமையாளர் வீரபத்திரன் என்று எ.ம.சா. ஆ 3 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3 மாத கால கட்டத்தில் வீரபத்திரன் என்பவருக்கு ஓட்டுன்ர் உரிமம் உள்ளதா என்பது குறித்து அறிவிப்பு அனுப்பி தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

முதல் விசாரணையில் சொன்னதுபோல் யாருக்கு சலான் கொடுக்கப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்தவிதமான அறிவிப்பும் அனுப்பாமல் யாருக்கு சலான் வழங்கப்பட்டது குறித்தோ தெரியாமல் வீரபத்திரனுக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்பது குறித்தோ இந்த நீதிமன்றத்தில் சொல்ல முடியாது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.11.13 20:11:55 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.